**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 06**
**மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) – மார்ச் – 2025**
**உயிரி – விலங்கியல் – விடைக்குறிப்பு**

**மொத்த மதிப்பெண்கள்: 35**

**பிரிவு– 1**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 8 x 1 = 8**

குறிப்பு–

1. நீலம் அல்லது கருப்புநிற மையினால் எழுதப்பட்ட விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்தல் வேண்டும்.
2. பகுதி – 1 இல் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.

| Q. NO | TYPE – A | | Q. NO | TYPE – B | | MARK |
|---|---|---|---|---|---|---|
| 1 | இ) | அலங்கார வகை – சில்கி | 1 | அ) | கார்பமினோ ஹீமோகுளோபின் | 1 |
| 2 | அ) | நரம்புத் தூண்டல் கடத்தலுக்காக ஆற்றல் வெளிப்பாடு அதிகரித்தல் | 2 | வினா எண் குறிப்பிட்டிருந்தால் மதிப்பெண் வழங்கவும் | | 1 |
| 3 | அ) | நுமாடிக் எலும்பு | 3 | அ) | இரத்த நுண் நாளங்களின் மொத்தப் பரப்பு நுண் தமனிகளின் மொத்த பரப்பைவிடப் பெரியது | 1 |
| 4 | ஆ) | ஏரியோலார் திசு | 4 | அ) | நரம்புத் தூண்டல் கடத்தலுக்காக ஆற்றல் வெளிப்பாடு அதிகரித்தல் | 1 |
| 5 | அ) | கார்பமினோ ஹீமோகுளோபின் | 5 | இ) | அலங்கார வகை – சில்கி | 1 |
| 6 | வினா எண் குறிப்பிட்டிருந்தால் மதிப்பெண் வழங்கவும் | | 6 | ஆ) | ஏரியோலார் திசு | 1 |
| 7 | அ) | இரத்த நுண் நாளங்களின் மொத்தப் பரப்பு நுண் தமனிகளின் மொத்த பரப்பைவிடப் பெரியது | 7 | அ) | ஆண்டி டை யூரிடிக் ஹார்மோன் | 1 |
| 8 | அ) | ஆண்டி டை யூரிடிக் ஹார்மோன் | 8 | அ) | நுமாடிக் எலும்பு | 1 |

## பிரிவு–2

**ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி** **4X2=8**

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 9 | சார்லஸ் டார்வின் பங்கு:<br>1859ல் சார்லஸ் டார்வின் ''சிற்றினங்களின் தோற்றம்'' என்ற நூலில், இயற்கை தேர்வின் மூலம் சிற்றினங்களுக்கு இடையேயான பரிணமாத் தொடர்புகளை விளக்கியுள்ளார். | 2 |
| 10 | எலும்பு மீன்களின் பொதுப் பண்புகள்: **(ஏதேனும் 2 மட்டும்)**<br>1. நன்னீர் மற்றும் கடல் நீரில் வாழ்பவை.<br>2. கதிர் வடிவ உடலை உடையவை<br>3. எலும்பினால் ஆன அகச்சட்டகம்.<br>4. கேனாய்டு, சைக்ளாய்டு அல்லது டீனாய்டு வகை செதில்களால் ஆனவை.<br>5. இழை வடிவ செவுள்களால் சுவாசிக்கின்றன.<br>6. காற்றுப்பைகள் காணப்படுகின்றன.<br>7. ஈரறைகளைக் கொண்ட இதயம்<br>8. மீசோநெஃப்ரிக் வகை சிறுநீரகம்<br>9. ஆண் பெண் உயிரிகள் தனித் தனியானவை<br>10. புறக்கருவுறுதல்<br>11. முட்டையிடுவன. | 2 |
| 11 | மண்புழுவின் சுவாசம் : **(ஏதேனும் 1 மட்டும்)**<br>1. உடற்சுவரின் வழியாகவே சுவாசம் நடைபெறுகிறது<br>(அல்லது)<br>2. தோலின் புறப்பரப்பு, அதிக இரத்த நாளங்களைக் கொண்டிருப்பதால் காற்று பரிமாற்றம் எளிதில் நடைபெறுகிறது. (அல்லது)<br>3. வெளிக் காற்றிலுள்ள ஆக்சிஜன் தோலினை ஊடுருவிச் சென்று இரத்தத்தை அடைகிறது. அதைப்போலவே கார்பன் டைஆக்ஸைடு இரத்தத்திலிருந்து வெளியேறுகிறது.<br>(அல்லது)<br>4. காற்று பரிமாற்றம் நடைபெற ஏதுவாகக் கோழைமற்றும், உடற்குழி திரவத்ததால் தோல் ஈரப்பதத்துடன் வைக்கப்பட்டுள்ளது. | 2 |

| | | |
|---|---|---|
| 12 | உயிர்ப்புத்திறன் (VC)<br>1. அதிகபட்சமான ஒரு உட்சுவாசத்திற்குப் பிறகு வெளியேற்றப்படும் காற்றின் அதிகப்பட்ச கொள்ளளவு<br>(அல்லது)<br>2. காற்றை அதிகபட்சமாக உள்ளிழுத்துப் பின் அதிகபட்சமாக வெளியேற்றுவது உயிர்ப்புத்திறன் ஆகும்.<br>(அல்லது)<br>3. உயிர்ப்புத்திறன் = வெளிச்சுவாச சேமிப்புக் கொள்ளளவு + மூச்சுக் காற்று அளவு + உட்சுவாச சேமிப்புக் கொள்ளளவு<br>(அல்லது)<br>4. VC=ERV + TV + IRV | 2 |
| 13 | நெஃப்ரானின் அண்மை சுருள் நுண்குழலில் (அல்லது) PCT மீண்டும் உறுஞ்சப்படுதல் அதிகமாக நடைபெறுகிறது. | 2 |
| 14 | ஸ்டீராய்டு ஹார்மோன்கள் **(ஏதேனும் 4 மட்டும்)**<br>1. கார்டிசோல்<br>2. ஆல்டோஸ்டீரோன்<br>3. டெஸ்டோஸ்டீரோன்<br>4. ஈஸ்ட்ரோஜன்<br>5. புரோஜெஸ்டீரோன்<br>6. FSH | 2 |

பிரிவு–**3**

**ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி** **3 x 3 = 9**
**வினா எண் 19 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

| **வினா எண்** | **விடை** | **மதிப்பெண்** |
|---|---|---|
| 15 | மீன்களில் காணப்படும் காற்றுப்பைகளின் பயன்கள் :–<br>1. காற்றுப் பரிமாற்றம்<br>2. மிதவைத் தன்மை | 1 ½<br>1 ½ |
| 16 | நன்மை செய்யும் பாக்டீரியாக்கள் செல்லுலோஸ் செரித்தலுக்கு உதவுகின்றன. | 3 |

| | | |
|---|---|---|
| 17 | **பட்டின் பொருளாதாரமுக்கியத்துவம் :– (ஏதேனும் 3 மட்டும்)**<br>1. பட்டு நூல்கள் பட்டுத் துணிகள் தயாரிக்கப்பயன்படுகின்றன.<br>2. ஆடை அலங்கார பொருட்கள் தயாரிக்கப் பயன்படுகின்றன.<br>3. தொழிற்சாலைகளிலும் இராணுவத் துறையிலும் பட்டு பயன்படுத்தப்படுகிறது.<br>4. மீன்பிடி வலைகள்.<br>5. பாராசூட்டுகள்.<br>6. கார்ட்ரிட்ஜ் பைகள்.<br>7. தொலை தொடர்பு கம்பிகளின் மேலுறைகள் மற்றும் கம்பியில்லா தொலைபேசிக் கருவிகள்.<br>8. பந்தய காரின் டயர்கள்.<br>9. வடிகட்டி இழைகள்தயாரிக்க<br>10. மருத்துவத்துறையில் காயக்கட்டுத் துணிகள் மற்றும் தையலிடுவதற்கும் பயன்படுகிறது. | 3 |
| 18 | **அட்ரீனலின் பணிகள் (ஏதேனும் 3 மட்டும்)**<br>1. இது 3F ஹார்மோன் (பறத்தல், சண்டை மற்றும் பயம்) என்று அழைக்கப்படுகிறது.<br>2. கல்லீரலில் உள்ளகிளைக்கோஜனை சிதைத்து குளுக்கோஸாக மாற்றுகிறது.<br>3. கொழுப்பை, கொழுப்பு அமிலங்களாகச் சிதைத்து வெளியேற்றுதலையும் தூண்டுகின்றது.<br>4. நெருக்கடி காலத்தில் இதயத் துடிப்பு வீதம் மற்றும் இரத்த அழுத்தத்தை உயர்த்துகின்றது.<br>5. தோலின் மென்தசைகள் மற்றும் உள்ளுறுப்புத் தமனிகளைத் தூண்டி இரத்த ஓட்டத்தைச் குறைக்கின்றது.<br>6. எலும்புத் தசைகளுக்கு இரத்த ஓட்டத்தை அதிகரிப்பதன் மூலம் எலும்புத் தசை, இதயத்தசை மற்றும் நரம்புத் திசுக்களின் வளர்சிதை மாற்ற வீதத்தையும் உயர்த்துகின்றது. | 3 |

| | | | |
|---|---|---|---|
| 19 | திரவ மூட்டுகளின் வகைகள் | **(ஏதேனும் 3 மட்டும்)** | 3 |
| | முளை அச்சு மூட்டு (அல்லது) சுழலச்சு மூட்டு (Pivot Joint) | முதல் கழுத்து முள்ளெலும்பு மற்றும் அச்செலும்புக்கு இடையிலான மூட்டு | |
| | நழுவு மூட்டு(Gliding Joint) | மணிக்கட்டு எலும்புகளுக்கு இடையிலான மூட்டு | |
| | சேண மூட்டு(Saddle Joint) | முதல் மணிக்கட்டு எலும்பு மற்றும் உள்ளங்கை எலும்பிற்கும் இடையேயான மூட்டு | |
| | பந்து கிண்ண மூட்டு(Ball and Socket Joint) | தோள்பட்டை வளையத்திற்கும் மேற்கை எலும்புக்கும் இடையிலான மூட்டு | |
| | கீல் மூட்டு(Hinge Joint) | முழங்கால் மூட்டு இணைப்பு | |
| | கோண மூட்டு(Condyle / Angular / Ellipsoid) | ஆர எலும்புக்கும் மணிக்கட்டு எலும்புக்கும் இடையிலான மூட்டு | |

## பிரிவு – 4

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **2x5 = 10**

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 20 (அ) | தவளையின் செரிமான மண்டலத்தை படம் வரைந்து பாகங்களை குறி<br> | படம்<br>3<br><br>பாகம்<br>(ஏதேனும் 4 மட்டும்)<br>2 |

<table>
<tr><td colspan="3">(அல்லது)</td></tr>
<tr><td>20<br>(ஆ)</td><td>சிதைவடைந்த இரத்தக் குழாயில் நடைபெறும் இரத்த உறைதலை விளக்கும் தொடர் வரைபடம். உள்ளார்ந்த இரத்த உறைதல் நிகழ்வு<br>
<br>படம் : 7.3 சிதைவடைந்த இரத்தக்குழாயில் நடைபெறும் இரத்த உறைதலை விளக்கும் தொடர் வரைபடம். உள்ளார்ந்த இரத்த உறைதல் நிகழ்வு</td><td>5</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 21<br>(அ) | கண்ணின் ஒளிவிலகல் குறைபாடுகள்<br>**மையோப்பியா – கிட்டப்பார்வை**<br>➢ பாதிப்படைந்த நபரால் அருகில் உள்ள பொருட்கள் தெளிவாகப் பார்க்க முடியும்<br>➢ தொலைவில் உள்ள பொருட்கள் தெளிவாகக் காண முடிவதில்லை<br>➢ கண்கோளம் நீண்டிருத்தல், விழிலென்ஸ் அதிகமாகத் தடிப்புற்றிருத்தல்.<br>➢ ஒளிக்கதிர்கள் விழித்திரையின் மஞ்சள்பகுதிக்கு (Fovea) முன்பாகக் குவிக்கப்படுகிறது.<br>➢ இதனால் பார்வை தெளிவற்று காணப்படுகிறது.<br>➢ சரிசெய்ய குழி லென்ஸ் பயன்படுத்தப்படுகிறது.<br><br>**ஹைப்பர் மெட்ரோப்பியா – தூரப்பார்வை**<br>➢ இதனால் பாதிப்படைந்தநபரால் தொலைவில் உள்ள பொருட்களைத் தெளிவாகக் காண முடியும்<br>➢ அருகில் உள்ள பொருள்களைத் தெளிவாகக் காண முடியாது.<br>➢ கண்கோளம் சுருக்கமடைதல் விழிலென்ஸ்மெலிந்திருத்தல்.<br>➢ ஒளிக்கதிர்கள் விழித்திரைக்கும் பின்னால் குவிக்கப்படுகிறது.<br>➢ சரிசெய்ய குவிலென்ஸ் பயன்படுத்தப்படுகிறது.<br><br>கண்ணின் ஒளிவிலகல் குறைபாடுகள் | 1 ½<br><br>½<br><br>1 ½<br><br>½<br><br>½<br><br>½ |
| | **(அல்லது)** | |
| 21<br>(ஆ) | மீன்களின் உணவூட்ட மதிப்பு : **(ஏதேனும் 5 மட்டும்)**<br>1. மீன்கள் புரத உணவிற்கான உயர்ந்த ஆதாரமாகும்.<br>2. மீன் இனங்கள் அதிக அமினோ அமில செறிவைக் கொண்டுள்ளன.<br>3. மீன்களில் ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் நிறைந்துள்ளன.<br>4. கால்சியம், மெக்னீசியம், பாஸ்பரஸ், பொட்டாசியம், இரும்பு, மாங்கனீசு, அயோடின் மற்றும் தாமிரம் போன்ற தனிமங்கள் உள்ளன.<br>5. மீன் எண்ணெய்யில் வைட்டமின் A மற்றும் D மிகுந்துள்ளது.<br>6. மீன் உடல் எண்ணெய் சோப்பு, பெயிண்ட் மற்றும் நறுமனப் பொருட்கள் தயாரிக்க பயன்படுகிறது.<br>7. பன்றி, பறவைகள் மற்றும் கால்நடைகளுக்கு உணவு தயாரிக்க பயன்படுகிறது.<br>8. இசின்கிளாஸ் ஒயின், பீர், வினிகர் போன்ற பொருட்களை சுத்திகரிக்க பயன்படுகிறது. | 5 |